Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,**

**CUDDALORE**

**Sessions** **Case No. 44 of 2020**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.13**
Defence
Court

| | |
|---|---|
| Name | சௌமியா |
| Husband's name | வேல்முருகன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 31 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 9th day of October 2023.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 9th day of October 2023.**

SIGNATURE OF THE JUDGE.

1முதல் 5 எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

1. நான் நெல்லிக்குப்பம் மேல்பாதி கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன வேல்முருகன் எனது கணவர். அசா 1 கண்ணன் எனது

கொழுந்தனார். ஆஜர் எதிரிகளை பார்த்துள்ளேன். அவர்கள் மேல்பாதி கிராமத்தை சார்ந்தவர்கள். அவர்கள் எங்கள் ஊரின் வேறு பகுதியில் வசித்து வருகின்றார்கள். கடந்த 2020 ஜனவரி ஒன்றாம் தேதி, புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது ஏற்பட்ட பிரச்சினையில் என் கணவரை வெட்டி கொன்று விட்டார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். அந்த சமயத்தில் நான் பெங்களூரில் என் சித்தப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாததால் பார்க்க சென்றிருந்தேன். எதிரிகள் ஊருக்கும் எங்கள் ஊருக்கும் பிரச்சினை இருந்து வந்தது. எங்கள் ஊரில் இறப்பு ஏதேனும் நிகழ்ந்தால், எதிரிகளின் ஊரின் வழியாக தான் எடுத்து செல்வது வழக்கம். எங்கள் ஊரை சேர்ந்த விஜயா என்பவர் இறந்தபோது, அவரது உடலை எதிரிகள் ஊரின் வழியாக எடுத்து சென்றபோது, எங்கள் ஊரை சேர்ந்தவர்களும், எதிரிகள் ஊரை சேர்ந்தவர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டது. அந்த பிரச்சினையின் தொடர்ச்சியாக பகையை கொண்டு, புத்தாண்டு அன்று ஏற்பட்ட பிரச்சினையின்போது என் கணவரை வெட்டி கொன்று விட்டார்கள். நான் ஜனவரி 1 ஆம் தேதி மாலையே பெங்களூரில் இருந்து வந்து, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த என் கணவரின் பிரேதத்தை பார்த்தேன். என்னை போலிசார் இப்போது விசாரிக்கவில்லை, அப்போது தான் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. ஏதுமில்லை என கற்றறிந்த வழக்கறிஞர் கூறினார். அந்த விவரம் பதிவு செய்யப்பட்டது.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. எனது சொந்த ஊர் நெல்லிக்குப்பம். நான் நெல்லிக்குப்பத்தை சேர்ந்த வேல்முருகனை திருமணம் செய்துகொண்டேனா என்றால் என் கணவரின் சொந்த ஊர் நடுவீரப்பட்டு. நான் பெங்களூரில் இருக்கும்போது என் கணவரின் இறப்பு தொடர்பாக தகவல் சொன்னார்கள். தகவல் கிடைத்தவுடன் நான் நேரடியாக கடலூர் அரசு மருத்துவமனை சென்றேன். அங்கு என் கணவரின் சடலம் இல்லாததால் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் இருப்பதாக கூறியதால் அங்கு சென்றேன். விஜயா என்பவரின் சடலம்

எடுத்துசெல்லும்போது பிரச்சினை ஏற்பட்டதாக நான் கூறுவது என் கணவர் வேல்முருகன் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். நான் வெங்கடகிரி என்பவரை திருமணம் செய்துகொண்டேன் என்றும், என்னிடம் காட்டப்படும் புகைப்படம் அந்த திருமணம் தொடர்பானது என்றால் ஆமாம். **அந்த புகைப்படம் எதசாஆ 1 ஆகும்**. இந்த வழக்கு தொடர்பாக சம்பவம் நடைபெற்று, இரண்டு மூன்று மாதங்கள் கழித்து, காவல்நிலையத்திற்கு வரவழைத்து விசாரித்தார்கள்.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 44 of 2020**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.14**
Defence
Court

| | |
|---|---|
| Name | குமார் |
| Father's name | தனகோடி |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 52 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 9th day of October 2023.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 9th day of October 2023.**

SIGNATURE OF THE JUDGE.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

1. நான் மேல்பாதி கிராமத்தில் கோயில் பூசாரியாக பணிபுரிந்து வருகின்றேன். மேல்பாதி மெயின்ரோடில் மளிகை கடை ஒன்று வைத்து நடத்தி வருகின்றேன். இறந்த வேல்முருகனை தெரியும். அசா 13 சௌமியாவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும்.

எல்லோரும் எங்கள் ஊர்க்காரர் என்ற வகையில் தெரியும். வேல்முருகன் இறந்த விவரம் தெரியும். அவர் அடிப்பட்டு இறந்துகிடந்த விவரம் எனக்கு தகவல் சொன்னார்கள். அந்த சமயத்தில் நான் அம்பேத்கர் நகரில் உள்ள மாரியம்மன்கோயிலில் பூஜை செய்துக்கொண்டிருந்தேன். நான் இறந்த வேல்முருகனின் சடலத்தை பார்க்கவில்லை. புத்தாண்டு அன்று எங்கள் ஊரில் நடைபெற்ற பிரச்சினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எங்கள் கடையிலிருந்து இருபது அடி தள்ளி இறந்த வேல்முருகனின் சடலம் கிடந்ததாக தெரிந்துகொண்டேன். அன்று காலை ஐந்து மணிக்கெல்லாம் நான் கோயிலுக்கு சென்றுவிட்டேன். என் கடையில் இருந்து பார்த்தால் சடலம் கிடந்த இடம் நேரடியாக தெரியுமா என்றால், நேரடியாக பார்க்க இயலாது. ஆனால் அந்த இடம் ஒரு சந்தில் எங்கள் கடைக்கு அருகில் உள்ளது. நான் கோயில் பூஜை முடித்துவிட்டு பூட்டிவிட்டு திரும்ப வரும்போது எங்கள் கடை சந்திலிருந்து ஆம்புலன்ஸ் வந்தது. யார் ஆம்புலன்சில் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. 01.01.2020 அன்று அதிகாலை 00.15 மணி அளவில் மேல்பாதி பசங்களுக்கும், அம்பேத்கர் நகர் பசங்களுக்கும் பிரச்சினை வந்து, யாரோ போலிசுக்கு போன் செய்ததால், போலிசார் சைரன் வாகனத்தில் வந்து, அனைவரையும் விரட்டியடித்ததை பார்த்தேன் என்றும், பத்து பதினைந்து நபர்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள் என போலிசாரிடம் நான் அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால், குறிப்பிட்டுள்ளேன். சாட்சி தானாக, போலிசார் சைரன் வாகனத்தில் வந்தார்கள், அதனால் எழுந்து சென்று பார்த்தேன். அங்கிருந்து சைரன் வாகனம் வந்தவுடன் அங்கிருந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.

<u>முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. நான் வைத்துள்ள கடை என் தாத்தா காலத்திலிருந்து இருந்து வருகின்றது. சற்றேறக்குறைய நூறு ஆண்டுகள் இருக்குமா என்றால் இருக்கும். எனது வீடு, கடை இரண்டும் வடக்கு பார்த்த வாசற்படி என்றால், வீடு கிழக்கு பார்த்தவாறு அமைந்துள்ளது, கடை வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ளது. வடக்கு புறம் உள்ள சாலை, நெல்லிக்குப்பம் – குச்சிபாளையம்

செல்லும் முதன்மை சாலை என்றால் சரிதான். என் வீடு கிழக்கு மேற்காக தோராயமாக 25 அடி நீளம் இருக்குமா என்றால் தோராயமாக இருக்கும். தெற்கு வடக்காக தோட்டம் வரை 80 அடி இருக்கும் என்றால், 150 அடி இருக்கும். வீடு 2000 ஆம் வருடத்தில் புதுப்பித்து கட்டப்பட்டது. என் வீட்டின் பின்புறத்தில் தெற்கு பகுதியில் 300 அடி தூரத்தில் நிலம் உள்ளது என்றால் ஆமாம், இப்போது வீடாகிவிட்டது. அதன்பிறகு தெற்கு பகுதியில் 100 அடி தொலைவில் வீடுகள் உள்ளன என்றால் ஆமாம். அதற்கு அடுத்து மாரியம்மன்கோயில் தெரு, கிழக்கு மேற்காக உள்ளது என்றால் சரிதான். அந்த கிழக்கு மேற்கு தெருவில், மேற்கு புறத்தில் பிடாரியம்மன்கோயில் உள்ளது என்றால் சரிதான். நெல்லிக்குப்பம் பிரதான கிழக்கு மேற்கு சாலையிலிருந்து என் வீட்டுக்கும் மேற்கால் உள்ள தெற்கு வடக்கு சாலை, நேராக பிடாரியம்மன்கோயிலில் முடியும் என்று சொன்னால் சரிதான். பிடாரியம்மன்கோயிலுக்கு கிழக்கு பக்கத்தில் 300 அடி தூரம் வரை காங்க்ரீட் சாலை உள்ளது என்றால் சரிதான். பிடாரியம்மன்கோயில் எதிரில் மரம், செடி, கொடி, புதர் ஆகியவை இல்லை என்றால் சரிதான். என் வீட்டின் வாசலிலிருந்து பிடாரியம்மன்கோயிலை பார்க்க முடியுமா என்றால் பார்க்கமுடியாது. டாக்டர் அம்பேத்கர் நகரிலிருந்து பிடாரியம்மன்கோயிலில் என்ன நடைபெறுகிறது என்று பார்க்க முடியாது என்றால் ஆமாம். போலிசார் என்று என்னை விசாரித்தார்கள் என்றால், சம்பவம் நடந்த தினத்திலிருந்து நான்கு அல்லது ஐந்து நாட்கள் கழித்து விசாரித்தார்கள். என் வீட்டு எதிரில் கேக் வெட்டினார்களா என்றால் இல்லை.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*